©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 11] சென்னை, புதன்கிழமை, மார்ச் 24, 2010
பங்குனி 10, திருவள்ளுவர் ஆண்டு–2041

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது ; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்டம் எண் 9/2010**

**2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 32/2006.**

**18–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

2. 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டத்தின், 18–ஆம் பிரிவில் (3)–ஆம் உட்பிரிவில் “உள்ளீட்டு வரிவரவு பெறக்கூடிய தேதியிலிருந்து” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக “பூஜ்யவீத விற்பனை செய்கின்ற தேதியிலிருந்து” என்னும் சொற்றொடரை அமைத்தல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்டம் எண் 11/2010**

## 2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

2. 2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தின், 4–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவில்,– **தமிழ்நாடு சட்டம் 16/2003.**

(1) (a) எனும் கூறில், "2008–2009" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2010–2011" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (b) எனும் கூறில், "2008 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31–ஆம் தேதி" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2011–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31–ஆம் தேதி" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்டம் எண் 12/2010**

## 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 22/1959.**

**47–எனும் பிரிவிற்கான திருத்தம்.**

2. 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் 47–ஆம் பிரிவில், (3)–ஆம் உட்பிரிவில்,–

(1) "ஓர் ஆண்டு" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக "இரண்டு ஆண்டுகள்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) வரம்புரைக்குப் பின்னர் பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது,–

மேலும், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியன்று ஓர் ஆண்டு என்பதான பதவிக் கால அளவை நிறைவு செய்திருக்காத அறங்காவலர் ஒவ்வொருவரும் அவர்தம் நியமனத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் என்பதான கால அளவிற்கு அறங்காவலராகத் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.